## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

## விழுப்புரம்

## அமர்வு வழக்கு எண். 257/2014

அ.சா.10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வி. பாண்டியன் | | |
| த/பெ | வீரமுத்து | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | அரசு மருத்துவர் (ஓய்வு) |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 66/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 12.06.2025. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இணை பேராசிரியராக பணியிலிருந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 2009 ஆம் வருடம் விழுப்புரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது, கண்டமங்கலம் காவல் ஆய்வாளர் மருத்துவ நமூனாவில் கொடுத்த பாலையா வயது 52 என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்ய போடப்பட்டிருந்தது. பிரேத பரிசோதனை 10-09-2009 காலை 11.50 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. பிரேதத்தை தலைமை காவலர் நீலகண்டன் அடையாளம் காட்டினார்.

பிரேதத்தின் மீது மரண விரைப்பு தன்மை காணப்பட்டது. கண்கள் மூடி இருந்தன. வாய் திறந்த நிலையில் இருந்தது. நாக்கு உள்ளே இருந்தது. வலது பக்க காதில் இருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

அவர் மீது காணப்பட்ட காயங்கள்

<u>வெளிப்புற காயங்கள்</u>

1)இடது காதிற்கு அருகில் மேலிருந்து கீழாக 2 x 2 x 5 செ.மீ அளவில் ஒரு வெட்டு காயம் இருந்தது. அந்த காயம் காதின் மேல் பகுதியில் இருந்து இடது பக்கம் மேல் உதடு வரை நீண்டு இருந்தது.

2)இடது காதின் மேல் கீழ்ப்பக்கத்தில் 3 x ½ x ½ செ.மீ அளவில் ஒரு சிதைந்த காயம் அந்த காதின் கீழ் பகுதி மட்டும் வெட்டப்பட்டிருந்தது.

3)இடது தாடை எலும்புக்கு கீழே கழுத்தின் மேல் பகுதியில் குறுக்கு வாட்டத்தில் 17 x 5 x 3 செ.மீ அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது.

4)காயம் ஒன்றுக்கு கீழே 11 x 1 x 1 செ.மீ அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது.

5) கழுத்தின் கீழ் பகுதியில் 10 x 5 x 6 செ.மீ அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது.

6)வலது பக்க மார்பில் மேல் பகுதியில் 3 x ½ x 1 செ.மீ அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது.

7)இடது முழங்கையில் 2x ½ x ½ செ.மீ அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது.

8)இடது முன்னங்கையில் மேல் பகுதியில் 3x 1/2 x ½ செ.மீ. அளவில் ஒரு கிழிந்தகாயம் காணப்பட்டது.

9)இடது முன்னங்கையின் நடுப்பகுதியில் 3 x ½ x 1/2 செ.மீ. அளவில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டது.

10)இடது ஆள்காட்டி விரலில் 1x ½ x ½ செ.மீ அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது.

11) இடது பக்க விலா பகுதியில் மேல் பகுதியில் 1 ½ x 1 ½ x ½ செ.மீ அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

12)இடது மார்பின் மேல் பகுதியில் 3 x 1x 3 செ.மீ அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

<u>உட்புற காயங்கள்</u>

1)காயங்களின் உள்கூறாய்வில் காயம் ஒன்றை பரிசோதனை செய்தபோது, மேலிருந்து கீழாக இடது பக்க தலையிலிருந்து இடது பக்க மேல் உதடு வரை கிழிந்திருந்தது. ஆழமாக இருந்தது. காயத்தின் விளிம்புகள் கூர்மையாக இருந்தன. அந்த காயங்களின் வழியாக இடது பக்க தாடை எலும்பு, இடது பக்க மண்டை ஓடு தெரிந்தது. மேலும் அந்த காயத்தை பரிசோதனை செய்தபோது, உள்ளுறுப்புகள் வெட்டப்பட்டு காணப்பட்டது. இடது பக்க முகமும் அதன் வழியாக மூளையின் ஒரு சிறு பகுதியும் தெரிந்தது. மேலும் மண்டை ஓட்டின் கீழ் பகுதி உடைந்து காணப்பட்டது. மண்டை ஓட்டுக்கு உள்ளே உடைந்த இரண்டு எலும்பு துண்டுகள் காணப்பட்டது.

2)காயம் மூன்றை பரிசோதனை செய்தபோது, அந்த காயம் இடது பக்க தாடையில் கழுத்தின் மேல் பகுதியிலும் சேர்ந்து ஆழமாக வெட்டப்பட்டு இருந்தது. காயத்தின் ஓரங்கள் கூர்மையாக காணப்பட்டன. காயம் குறுக்கு வாட்டத்தில் இருந்தது. அதன் வழியாக உள்ளுறுப்புகள் தெரிந்தன.

3)காயம் ஐந்தை பரிசோதனை செய்த போது, இது கழுத்தின் முன் பகுதியிலும், இரண்டு பக்கவாட்டிலும் நீண்டிருந்தது. அதன் வழியாக உள்ளிருந்த உறுப்புகள் நன்றாக தெரிந்தன. இரண்டு பக்கமும் அதன் அகலம் 3 ½ செ.மீ வலது பக்க ஓரத்தில் 5 செ.மீ அதன் வழியாக மூச்சுக் குழல், உணவுக் குழல், கழுத்தில் உள்ள பெரிய ரத்தக் குழாய்கள் வெட்டப்பட்டிருந்தன. அந்த வெட்டப்பட்ட பகுதிகள் நன்றாக தெரிந்தன. மேலும் அந்த காயத்தை பரிசோதித்த போது, தண்டுவடம் C4 எலும்பின் அளவில் முன்பக்கமாக வெட்டப்பட்டிருந்தது. அங்கு உறைந்த ரத்தம் கருப்பு நிறத்தில் காணப்பட்டது.

மார்பு பகுதி

விலா எலும்புகள் சீராக இருந்தன. இருதயம் வெளிர்ந்து காணப்பட்டது. அறைகள் காலியாக இருந்தது. நுரையீரல்கள் வெளிர்ந்து காணப்பட்டது. வயிற்றுப் பகுதி இரைப்பையில் 200 மிலி அளவில் பழுப்பு நிற திரவம் இருந்தது. மற்ற உறுப்புகள் அனைத்தும் வெளிர்ந்து காணப்பட்டன. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது.

பிரேத பரிசோதனை 10-09-2009 பகல் 1:30 மணிக்கு முடிந்தது.

கருத்துரை

இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட காயங்களினால் உண்டான ரத்தப்போக்கு மற்றும் மரண அதிர்ச்சியினால் பிரேத பரிசோதனைக்கு சுமார் 12-ல் இருந்து 16 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்க கூடும் என்று நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை(கருத்துரையுடன் கூடியது) அ.சா. ஆ.4 ஆகும். மேற்படி காயங்கள் கூர்மையான ஆயுதங்கள் தாக்கியதால் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் இறந்து போன நபரின் பிரேதம் பிரேத பரிசோதனைக்காக யாரால், எந்த நேரத்தில் கொண்டுவரப்பட்டது என்று எனக்குத் தெரியாது. பிரேத பரிசோதனை அறையில் இவர் தான் இறந்து போன நபர் பாலையா என்று யார் என்னிடம் அடையாளம் காட்டினார்கள் என்றால் அங்கிருந்த தலைமை காவலர் திரு.நீலகண்டன் HC 1010 என்பவர் அடையாளம் காட்டினார். வழக்கு சம்பந்தமாக என்னை காவல்துறையினர் விசாரணை செய்தபோது என்னிடம் ஆயுதங்களை காட்டி விசாரணை செய்தார்களா? என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. போலீசார் என்னை எங்கே வைத்து விசாரணை செய்தார்கள் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.